# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in

ஆர்பிஐ/2009-10/142

டிபிஓடி.நெ.எல்இஜி.பிசி.37/09.07.005/2009-10 செப்டம்பர் 2, 2009

அட்டவணையிடப்பட்ட வர்த்தக வங்கிகள் அனைத்தும்
(ஆர்ஆர்பிக்களைத் தவிர்த்து)

அன்புடையீர்,

**தன்பித்தம், மூளைப் பாதிப்பு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பல்வகை உடல் ஊனங்கள் சட்டம், 1999 கீழ் வரும் நபர்களின் நல்வாழ்விற்கான தேசிய அறக்கட்டளை சார்பில் உள்ளூர் அளவில் அமைக்கப்பட்டிருக்கும் குழுக்கள் குறித்த தகவலை அறிவித்தல்**

சட்ட விதிகளுக்கு உட்பட்ட ஊனமுற்றவர்களின் சட்டரீதியான பாதுகாப்பாளர்கள் கணக்கு ஆரம்பிக்க / கணக்குகளை நடத்த மனநல ஆரோக்கியச் சட்டம், 1987 கீழ் மாநில நீதிமன்றம் அல்லது தன்பித்தம், மூளைப் பாதிப்பு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பல்வகை உடல் ஊனங்கள் சட்டம், 1999 (இனி மனநலக் குறைபாடுகள் சட்டம் என்று அழைக்கப்படும்) கீழ் வரும் நபர்களின் நல்வாழ்விற்கான தேசிய அறக்கட்டளை சார்பில் உள்ளூர் அளவில் அமைக்கப்பட்டிருக்கும் குழுக்கள் வழங்கியிருக்கும் காப்பாளர் சான்றிதழை வங்கிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாடிக்கையாளர் சேவைகள் தலைப்பில் 01-ஜூலை-2009 தேதியிட்ட முதன்மை சுற்றறிக்கை எண். DBOD.No.Leg.BC.9/ 09.07.006/ 2009-10 பத்தி எண். 11-ஐ காணவும். ஊனமுற்ற நபர்களின் பெற்றோர்கள் / உறவினர்கள் இவ் வகையில் எவ்விதமான தொல்லைகளுக்கும் உட்பட வேண்டாதவாறு அவர்கள் கிளைகளுக்கு உரிய வழிநடத்தல் குறிப்புகளை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன.

2. தில்லி உயர் நீதிமன்றத்தில் வாதிடப்பட்ட வழக்கு ஒன்றில், அனைத்து வங்கிகளின் கிளைகளில் தெளிவாகத் தெரியும் ஓரிடத்தில் (i) இயற்றிய சட்டத்தின் (மனநலக் குறைபாடுகள் சட்டம்) கீழ் அளிக்கப்படும் வசதிகள் குறித்த அத்தியாவசிய விபரங்கள்; (ii) மனநலக் குறைபாடுகள் சட்டத்தின் கீழ் பெறப்படும் சான்றிதழுக்காக சம்பந்தப்பட்டவர்கள் உள்ளூர் அளவிலான குழுக்களை அணுகலாம் என்றும் அவ்வாறு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றும்; மற்றும் (iii) அந்தந்த வட்டாரங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளூர் அளவிளான குழுக்களின் விபரங்கள் ஆகியவற்றை அறிக்கையாக வைத்திருப்பதை வங்கிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மான்புமிகு நீதிமன்றம் பணித்திருக்கிறது. இவ்வாறு வைக்கப்படும் அறிக்கை உள்ளூர் மொழியிலும் ஆங்கிலம் / இந்தி (அல்லது இரண்டிலும்) இருக்க வேண்டும் என்றும் பணித்திருக்கிறது.

---

3. நீதிமன்றத்தின் மேற்கண்ட கட்டளைகளைக் கண்டிப்பாக வங்கிகள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. மனநலக் குறைபாடுகள் சட்ட விதிகளுடன் முழுமையான இணக்கத்துடன் வங்கிகள் நடந்துகொள்ள வேண்டும் என்றும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப் படுகின்றன. தன்பித்தம், மூளைப் பாதிப்பு, மனநல வளர்ச்சியின்மை மற்றும் பல்வகை உடல் ஊனங்கள் நபர்களின் நல்வாழ்விற்கான தேசிய அறக்கட்டளை சார்பில் உள்ளூர் அளவில் அமைக்கப்பட்டிருக்கும் குழுக்கள் விபரங்கள் தேசிய அறக்கட்டளை இணையதளத்தில் www.thenationaltrust.in. காணக் கிடைக்கும் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

(பி. மஹாபட்ரா)
முதன்மை பொது மேலாளர்